# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 11 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## சங்கப்பாடல்கள்

1. “தச்சன் செய்த சிறு மா வையம்…” இப்பாடலை பாடியவர் யார்?

2. இப்பாடலின் திணை துறை என்பவற்றை எழுதுக.

3.. “**தச்சன் செய்த சிறுமா வையம்..**” இங்கு சிறுமாவையம் என்பதன் கருத்து யாது?

4. “**நற்றேர்ப் பொய்கை ஊரன் கேண்மை…**
    அ. இங்கு ஊரன் என்பது எந்த நிலத் தலைவனைக் குறிக்கின்றது?
    ஆ. கேண்மை என்பது குறிக்கும் கருத்து யாது?

5. **“ஊர்ந்து இன்புறார் ஆயினும் கையின்**
   **ஈர்த்து இன்புறும் இளையோர் போல…**
    அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
    ஆ. இங்கு இளையோர் என்பது யாரைச் சுட்டுகின்றது?

6 **பொய்கை ஊரன் கேண்மை**
   **செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே**
    அ. வளையல் செறிந்தமைக்கான காரணம் யாது?
    ஆ. செய்து என்பது யாது?

7. “**இனி நினைந்து இரக்கமாகின்று திணிமணல்…” எனும் பாடலின் திணை, துறை, பாடியவர் என்பவற்றை எழுதுக**

8..**இனி நினைந்து இரக்கமாகின்று திணிமணல்**
   **செய்யுறு பாவைக்கு..**
    அ. திணிமணல் என்பது குறிக்கும் கருத்து யாது?
    ஆ. இங்கு குறிப்பிடுவது என்ன விளையாட்டு?

9. **கொய் பூத் தைஇத் தண் கயம் ஆடும்**
   **மகளீரொடு கை பிணைந்து..**
    அ. தண் கயம் என்பதன் கருத்து இங்கு யாது?
    ஆ. கொய் பூ தைஇ என்பதால் கருதப்படுவது யாது? தைஇ என்பது யாது?

10. **மறை எனல் அறியா மாயமில் ஆயமொடு**
   **உயர் சினை மருதத் துறையுறத் தாழ்ந்து..**
    அ. மாயமில் ஆயம் என்பதன் மூலம் வெளிப்படும் கருத்து?
    ஆ. உயர்ச் சினை என்பது உணர்த்தும் கருத்து?

11. **நெடுநீர்க் குட்டத்து துடுமெனப் பாய்ந்து**
   **குளித்து மணற் கொண்ட கல்லா இளமை..**
    அ. குட்டம் என்பதன் பொருள் யாது?
    ஆ. இளையோரின் செயற்பாடாக இங்கு கூறப்படுகின்றது?

12. **அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ**
**தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று** .
அ. கொடித்தலை விழுத்தண்டு என்பதன் கருத்து?
ஆ. யாருடைய நிலை இங்கு இரங்கத்தக்கது?

13 **அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ**
**தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று**
அ. யாண்டுண்டு என்பது யாது?

14 “ கல்லா இளமை” என்பதனால் இளமைக்காலத்தின் எத்தகைய நிலை எடுத்துக் காட்டப் படுகின்றது.

## பகுதி 02

1. “தச்சன் செய்த சிறு மா வையம்…” எனும் பாடலில் வெளிப்படும் தலைவனின் சிறப்பினை குறிப்பிடுக?

2. “தச்சன் செய்த சிறு மா வையம்…” எனும் பாடலில் வெளிப்படும் அணியினைக் குறிப்பிட்டு விளக்குக?

3. இப் பாடலில் தலைவி தோழிமார் தலைவனின் வாயில்களுக்கு கூறும் விடயம் யாது?

4. இப்பாடலில் தலைவி தலைவனைப் பிரிந்திருந்தாலும் இன்பம் அடைந்துள்ளாள் என்பதற்கான ஆதாரம் யாது?

5 தலைவிக்கும் தோழிகளுக்கும் இடையேயான நட்பு எவ்வாறு வெளிப்படுகின்றது.

6 தலைவி தலைவன் மீது கொண்டுள்ள காதல் எவ்வாறு எவளிப்படுகின்றது.

7. “இனி நினைந்து இரக்கமாகின்று திணிமணல்…” எனும் பாடலில் இளையோரின் செயற்பாடுகள் பற்றி எடுத்துரைக்க?

8. முதுமைக்கால வெளிப்பாடு அதாவது முதியோரின் நிலை புலப்படுவதனை தெளிவுறுத்துக?

9. கல்லா இளமை எனும் அடியின் சிறப்பினை விளக்குக?